[8th April 1958

Continuation of the gravity and magnetic surveys of the sedimentary areas in the Tiruchirappalli district and the eastern belt of Madras State. Reconnaissance, reflection, seismic traverse along the coastal belt in the South Arcot and Tiruchirappalli districts.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—CALLING ATTENTION TO A MATTER OF URGENT PUBLIC IMPORTANCE UNDER RULE 40 OF THE ASSEMBLY RULES *RE* FIRE ACCIDENT AT GURUSWAMY GRAMANI GARDEN, SEMBIAM.

9-25 a.m. **MR. SPEAKER** : ஸ்ரீமதி சத்தியவாணிமுத்து 40-வது ரூல் பிரகாரம் உள்நாட்டு மந்திரியின் கவனத்துக்கு ஒரு முக்கிய விஷயத்தைக் கொண்டுவரப்போகிருர்கள். கனம் அங்கத்தினர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் பேசலாம். சுருக்கமாக முடிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

9-25 **DR. SRIMATHI SATHIYAVANIMUTHU** : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, எனது தொகுதியைச் சேர்ந்த குருசாமி கிராமணித் தோட்டத்தில் 3-4-1958 பிற்பகல் திடீரென்று பல வீடுகள் தீப்பற்றி எரிந்தன. வழக்கம் போல, தீ அணைக்கும் படையினர் வரும் முன்னறே, ஊர் பொதுமக்களும், தொழிலாளர்களும் சேர்ந்து தீயினை அணைத்திருக்கிருர்கள். இதிலே பாதிக்கப்பட்டவர்கள், ஒரு குடும்பத்தைத் தவிர, ஏனையோர்கள் முஸ்லிம் சமுதாயத்தைச் பாதிக்கப்பட்டு இருக்கிருர்கள். அவர்கள் அங்கும் இங்கும் இடமில்லாமல் தத்தளிக்கிருர்கள். ஒவ்வொரு வீட்டிலும் தீயைத் தடுத்து சொத்துக்களை எடுக்க முயற்சித்தும், எதனையும் எடுக்க முடியாத காரணத்தால், நடுத் தெருவில் விடப்பட்டு தவிக்கிருர்கள்.

தீ பற்றிய செய்தி கிடைத்தவுடன், அமைச்சர் அவர்களுக்கும், மற்றவர்களுக்கும் செய்தியைக் குறித்து, தெரிவித்தும் காலத்தில் வேண்டிய நடவடிக்கை எடுக்கவில்லை என்று தெரிகிறது. குறிப்பாக ரூ. 100 முதல் ரூ. 4,000 வரை ஒவ்வொருவரும் சொத்து நாசம் அடைந்திருக்கிருர்கள். சர்க்கார் மாமூல் முறையிலே, தாமதப்படுத்தி, மூன்று மாதம், ஆறு மாதம் கழித்து, 25 ரூபாயை கொடுக்காமல், விரைவில் அதற்குண்டான ஏற்பாடு செய்யவேண்டும். தெரிந்தவரை, குடும்பங்கள் வசதியான நிலையில் இருந்தவர்களாகவே தெரிகிறது. ஒரு வீட்டில் நான் கண்டேன், உபயோகத்தில் இருந்த ரேடியோ பற்றி எரிந்து, வொயர்களை மட்டும் காண முடிந்தது. வசதியோடு இருந்தவர்கள் என்ற காரணத்தால், சற்று அதிகமான பொருள் உதவி செய்து குடும்பங்களைக் காப்பாற்ற வேண்டும் என்றும், தாமதமின்றி உதவியளிக்கவேண்டும் என்றும், இதுவரை சர்க்கார் ஏதாவது உதவி செய்திருந்தால் அதனைச் சொல்லுமாறும் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் சபாநாயகர் அவர்களே, குருசாமி கிராமணித் தோட்டத்தில் அல்ல, செம்பியம் தில்லைநாயகம் பிள்ளை தெருவில், எப்ரல் 3-ம் தேதி, பிற்பகல் 3-43 மணிக்கு, நெருப்பு விபத்து ஏற்பட்டதாக தகவல் வந்தது. உடனே எழும்பூர், வேப்பேரி, கீழ்பாக்கம், வண்ணுரப்பேட்டை இவ்விடங்களிலுள்ள தீயணைக்கும் படைகளை அனுப்பிஞர்கள். நெருப்பு மூன்று மணி நேரத்தில் அணைக்கப்பட்டது. தீ எதனுல் ஏற்பட்டது என்பது தெரியவில்லை. இந்தத் தீயினுல் இழக்கப்பட்ட குடிசைகள், வீடிழந்த குடும்பங்கள் எண்ணிக்கை இவைகள் தரப்பட்டிருக்கின்றன. அழிக்கப்பட்ட வீடுகள் 25, வீடுகளை இழந்த குடும்பங்கள் 32 ; மாடாவது, மனிதனுவது உயிரிழந்தது ஒன்றும் இல்லை. இந்தத் தீயினுல் ஏற்பட்ட சேதம் ரூ. 4,300. நெருப்பணைக்கும் யூனிட்டுகள் வேலை செய்ததால் காப்பாற்றப்பட்ட சொத்துக்களின் மதிப்பு ரூ. 10,700.

எப்ரல் மாதம் 4-ம் தேதியன்று கலெக்டர், மேயர், மற்றும் நகரசபை அதிகாரிகள் எல்லோரும் அந்த இடத்திற்குச் சென்று, தீயினுல் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவச உணவு கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிருர்கள்.